# மஹா, யால நெற்பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் நீர்ப்பாசனத்தின் பங்களிப்பு - முள்ளிப்பொத்தானைப் பிரதேசத்தினை மையப்படுத்திய ஆய்வு

**S.M. Naseer and M.H. Mohamed Rinos**

*Department of Geography, South Eastern University of Sri Lanka,*

**Keywords:** நெற்செய்கை, காலநிலை மாற்றம், நீர்ப்பாசனம்

**அறிமுகம்**

இலங்கையின் மொத்த விவசாய நிலப்பரப்பில் சுமார் 25% இல் நெற்பயிர்ச்செய்கை இடம் பெறுகின்றது. இது 22% ஆன மொத்த உள்நாட்டு உற்பத்தியையும், 10 - 15% ஆனோருக்கு வேலை வாய்ப்பையும் வழங்கி வருகின்றது. பெரும் போகத்தின்போது 5 இலட்சத்து 60 ஆயிரம் ஹெக்டேயரிலும் சிறு போகத்தின் போது 3 இலட்சத்து 10 ஆயிரம் ஹெக்டேயரிலுமாக மொத்தம் 8 இலட்சத்து 70 ஆயிரம் ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. நாட்டில் 1.8 மில்லியன் குடும்பங்கள் நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (மத்திய வங்கி ஆண்டறிக்கை 2008)

ஆய்வுப் பிரதேசமான முள்ளிப்பொத்தானை இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை நிர்வாக மாவட்டத்தில் தம்பலகாம பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ளது இப்பிரதேசம் 10 கிராமங்களையும், 03 கிராமசேவகர் பிரிவையும் கொண்ட 2404 ஹெக்டேயர் பரப்பை கொண்டது. இப்பிரதேசம் மொத்த நிலப்பரப்பில் 30.5% ஆகும். இப்பிரதேச செயலகப் பிரிவில் மொத்த குடும்ப எண்ணிக்கையான 3477 இல் 1358 (39.5%) குடும்பங்களின் பிரதான தொழிலாக நெற்பயிர்ச்செய்கை அமைந்துள்ளது. மொத்த நிலப்பரப்பில் 90 வீதமான நிலம் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது. மொத்த விவசாய நிலப்பகுதிகளில் நெற் செய்கை 2056 (85.52%) ஹெக்டயர் பரப்பில் மேற்கொள்ளப்படுகின்றது. (மூலவளத் திரட்டு, தம்பலகாம பிரதேச செயலகம், 2010)

வரண்ட வலயத்திற்குரிய காலநிலைத் தன்மைகளைக் கொண்ட திருகோணமலையின் ஆய்வுப்பிரதேசமான முள்ளிப்பொத்தானை பரந்த சமவெளியாக காணப்படுவதனால் இப்பிரதேசத்தில் நெற்பயிர்ச்செய்கை நீர்ப்பாசனத்தின் மூலமும், மழையை நம்பியும் வருடத்தில் இரண்டு பருவங்களிலும் அதாவது சிறுபோகத்தில் (யால போகம்) 65%, பெரும்போகத்தில் (மஹாபோகம்) 95% மும் நெல் பயிரிடப்படுகின்றது. கந்தளாய் குளம், கல்மெட்டியாவ குளம்,ஈச்சங்குளம், இந்திவெவ, குடாகல்மெட்டியாவ, ஊல்பத்வெவ ஆகிய குளங்களிலிருந்து பெறப்படுகின்றது. பெரிய நீர்ப்பாசனத்தில் 1528 ஹெக்டேயரில் 1094 பேரும், சிறிய நீர்ப்பாசனத்தில் 76 ஹெக்டேயரில் 111 பேரும், மானாவாரியாக 430 ஹெக்டேயரில் 880 பேரும் நெற் செய்கையில் ஈடுபடுகின்றனர் (மூலவளத் திரட்டு, தம்பலகாம பிரதேச செயலகம், 2010).

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.

- நெற்பயிர்ச் செய்கையில் நீர்ப்பாசனம் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை அடையாளம் காணல்

- முள்ளிப்பொத்தானை பிரதேசத்தில் யால, மஹாபோக நெற்பயிர் செய்கையில் நீர்ப்பாசனத்தினால் ஏற்படுகின்ற தாக்கங்களை இனம்கண்டு அவற்றினை எதிர்காலத்தில் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாக மாற்றியமைத்தல்.

- திறமையற்ற நீர் முகாமைத்துவத்தினால் பாதிக்கப்படுகின்ற பிரதேசங்களை இனங்கண்டு அவற்றிலிருந்து விடுவித்து அதிகளவிலான விளைச்சலைப் பெறும் நோக்கில் பயன் தரக்கூடிய நிலமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்தல்.

நெடுங்காலமாக நெற்பயிர்ச் செய்கையில் காணப்பட்டுவரும் நீர்ப்பாசனம் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பதன் மூலம் உற்பத்தியை விருத்தியடையச் செய்வதனூடாக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும்.

## ஆய்வு முறையியல்

இந்த ஆய்வாய்வுக்கு முதலாம் நிலைத் தரவுகள் (Primary data), இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary data) பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகள் வெளிக்கள ஆய்வு, வினாக்கொத்து, நேரடியான பேட்டிகள் என்பனவற்றின் மூலம் சேகரிக்கப்பட்டது. எழுமாறாக தெறிவு செய்யப்பட்ட 60 விவசாயிகள், வட்டை விதானை 10, நீர்ப்பாசன உத்தியோகத்தர் 05, என மொத்தமாக 75 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகளாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், வெளியிடப்படாத அறிக்கைகள், வட்டை விதானைமார்கள், விவசாய ஆலோசனை நிலையம் போன்றவற்றிலிந்து சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் கணனி மூலம் கணிதப்புள்ளி விபரமுறைகள்,Excel package, SPSS, மற்றும் GIS இல் ஒழுங்கு படுத்தப்பட்டு, பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

## சுருக்கமும் முடிவும்

நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மொத்த (2056 ஹெக்டேயர்) பிரதேசத்தில் மஹா போகத்தில் 95 சதவீதம் (1995 ஹெக்டேயர்) நெற்பயிர்சசெய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதில் 4.2 சதவீதம் (85 ஹெக்டேயர்) வெள்ளப்பெருக்கு காரணமாக கைவிடப்படுவதோடு, 1.1 சதவீதமான (20 ஹெக்டேயர்) பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றது. சிறுபோகத்தில் 65 சதவீதமான பகுதியில் (1340 ஹெக்டேயர்) நெற்பயிர்சசெய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மஹா போகத்தினை விட 30 சதவீதமான (625 ஹெக்டேயர்) பகுதி நீர்ப்பாசனமின்மையால் கைவிடப்படுவதோடு, 1.82 சதவீதத்தில் (37 ஹெக்டேயர்) செய்யப்பட்ட பயிர் செத்துமடிகிறது.

இப்பிரதேசத்தில் அதிகமான குளங்கள் பருவகால மழைநீரினால் நிரம்புவதாகவும் பருவ மழையற்ற காலங்களில் நீர் வற்றுவதாகவும் காணப்படுகின்றன. இதனால், பருவமழை காலங்களில் அதிகமான நிலப்பரப்பில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதுடன், பருவ மழையற்ற காலங்களில் குறைவாகவும் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இப்பிரதேச குளங்களை கோடைகாலங்களில் விவசாயத்திற்கு தேவையான நீரினை வழங்கும் குளங்களாக ஆழப்படுத்தி நீரின் கொள்ளளவை அதிகமாக்குவதுடன், யாலபோக பிரதேசத்திற்கும், மேட்டு நிலக்காணிகளுக்கும் தேவையான நீரினை பெறநடவடிக்கை மேற்கொள்வதோடு, மேலதிகமான கழுவு நீரோட்டத்தை தடுத்து அந்நீரினை சேமிக்கும் யுக்தியை கையாண்டு நீர்ப்பாசனத்திட்டத்தில் மாற்றம் செய்வதுடன் மஹா, யால போகங்களுக்கிடையில் மேலும் ஓர் இடைப்போக நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள வேண்டும்.

முள்ளிப்பொத்தானை பிரதேசத்தில் கந்தளாய் குளம், கல்மெட்டியாவ குளம்,ஈச்சங்குளம், இந்திவெவ, குடாகல்மெட்டியாவ, ஊல்பத்வெவ ஆகிய குளங்களிலிருந்து நீரைப்பெற்று மஹாபோகம், யாலபோகம் என்பனவற்றில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதில் கந்தளாய் குளம், கல்மெட்டியாவ குளம்,ஈச்சங்குளம் என்பனவற்றிலிருந்து நீரினைப் பெறுவதனூடாக இரு போகங்களிலும் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய குளங்களிலிருந்து மஹாபோக நெற்ச்செய்கைக்காக மாத்திரமே நீர்விநியோகம் நடைபெறுகின்றது.

மஹாபோகத்தில் அதிக நிலப்பரப்பில் நெற்ப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் அதே நேரம் 85 ஹெக்டேயர் நிலம் வெள்ளப்பெருக்கின் காரணமாக விவசாயம் செய்யாமல் கைவிடப்படுவதோடு 20 ஹெக்டேயர் நிலம் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்றது. மறுபுறம் யால போகத்தில் நீர்ப்பாசன வசதி கொண்ட பகுதிகளில் மாத்திரமே நெற்செய்கை இடம்பெறுவதோடு மானவாரி நிலம் தவிர்ந்த (430 ஹெக்டேயர்) 195 ஹெக்டேயர் நிலம் நீர்ப்பாசனமின்மையால் கவனிப்பாரற்றுக்கிடக்கின்றது. 37 ஹெக்டேயர் நிலத்தில் செய்யப்பட்ட பயிர் செத்து மடிகிறது. காலநிலை மாற்றமானது பருவம் தப்பிய மழை காரணமாக வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு நிலமைகள் நெற்பயிர்ச் செய்கையில் பாரிய தாக்கங்கள்

ஏற்படுத்துவதனால் இந்த ஆராய்ச்சியை நீண்ட காலத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவையுள்ளது.

**References:**

Arasingham,S.R. (1981), Agricultural Extension in Sri Lanka Tropical agriculturist (Page 137,41-54)

Mapa,R.P (1999) Paddy Sector Challenges Change in 2020, Economic review January – march 1999, 24:3, People Bank Head Office Colombo-02

Panabokke.C.R (1996) Soil & agro ecological enviournment of Sri Lanka (Page: 15-28)

மத்திய வங்கி ஆண்டறிக்கை 2008

மூலவளத் திரட்டு, தம்பலகாம பிரதேச செயலகம், 2010.